# தமிழ் - மேல் நிலைக்கல்வி (304)

# (அக மதிப்பீடு) Tutor Marked Assignment (2023-24)

மொத்த மதிப்பெண்: 20

குறிப்பு:

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களின் அருகிலும் அதற்கான மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) விடைத்தாளின் முதல் பக்கத்தில் பெயர், பதிவு எண், தாளின் பெயர் போன்றவற்றை எழுதுதல் வேண்டும்.

---

1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) சிறுகதையின் உறுப்புகள் குறித்து எழுதுக. (பாடம் 26)
   (ஆ) விளம்பரத்தின் வகைகள் குறித்து எழுதுக. (பாடம் 30)

2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) இணையத்தின் பயன்கள் யாவை? (பாடம் 32)
   (ஆ) ஆளில்லா மின் நூலகம் குறித்து எழுதுக. (பாடம் 33)

3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2
   (அ) மின் அஞ்சல் அனுப்பும் முறை குறித்து எழுதுக. (பாடம் 34)
   (ஆ) அழைப்புச் சேவை மையத்தில் முகவர்களின் தகுதிகள் யாவை? (பாடம் 36)

4. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4
   (அ) பெண்கள் கல்வி கற்பதால் ஏற்படும் முன்னேற்றங்கள் யாவை? (பாடம் 19)
   (ஆ) நீர் மாசுபடுதல் குறித்து கட்டுரை வரைக. (பாடம் 20)

5. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4
   (அ) நிகழ்வுக் குறிப்பின் பயன்கள் யாவை? (பாடம் 41)
   (ஆ) கீழ்கண்ட பகுதியை படித்து மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக. (பாடம் 17)

இராமலிங்கர் 05-10-1823 இல் கடலூர் மாவட்டம் சிதம்பரத்திற்கு வடக்கேயுள்ள மருதூரில் பிறந்தார். அவர் தந்தையார் பெயர் இராமையாப்பிள்ளை. தாயார் பெயர் சின்னம்மாள். இவர்களின் ஐந்தாவது மகவாகப் பிறந்தார்.

இராமலிங்கத்தின் தந்தையார் இராமையாப்பிள்ளை குடும்பத்தாருடன் சிதம்பரம் கோயிலுக்குச் சென்று நடராசப் பெருமானை வணங்கினார். நடராசப் பெருமானை வழிபட்ட பின்பு, தீட்சிதர் சிதம்பர இரகசியத் திரையைத் தூக்க, கைக்குழந்தையாகிய அடிகள் தரிசித்தார்.

இராமலிங்கரின் தந்தை இராமையாப்பிள்ளை இறந்து விட்டார். அவருடைய தாயார் தம் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பொன்னேரி என்ற ஊருக்குச் சென்றார். சில காலம் கழித்துச் சென்னைக்குச் சென்றுவிட்டார்.

இராமலிங்கத்தின் அண்ணன் இராமலிங்கரை நன்கு படிக்க வைக்க வேண்டும் என மகாவித்வான் சபாபதி முதலியாரிடம் இராமலிங்கரைக் கல்வி கற்க அனுப்பி வைத்தார்.

இராமலிங்கர் ஒரு நாள் சென்னையிலுள்ள முருகன் கோயிலுக்குச் சென்றார். தெய்வமணிமாலை பாடல்களைப் பாடினார். இதை அவர் ஆசிரியர் அறிந்தார். இராமலிங்கருக்குத் தம்மால் கல்வி கற்றுக் கொடுக்க முடியாது என மறுத்து விட்டார்.

இதை அறிந்த இராமலிங்கரின் அண்ணன் மிகவும் கோபம் கொண்டார். தன் அண்ணியாரிடம் இனி ஒழுங்காகக் கல்வி கற்கப் போவதாகக் கூறினார். அண்ணன் மாடியில் ஓர் அறை ஒதுக்கிக் கொடுத்தார்.

அந்த அறையில் இராமலிங்கர் முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்தார். அதற்குத் தீபம் காட்டி வணங்கினார். அந்தக் கண்ணாடியில் முருகனின் திருவுருவம் தெரிந்தது. அப்போது இராமலிங்கருக்கு ஒன்பது வயது. அந்தச் சிறு வயதிலேயே இராமலிங்கர் அனைத்துக் கலைகளையும் நன்கு அறிந்திருந்தார்.

சென்னையில் ஒரு செட்டியா வீடு உள்ளது. அவர் வீட்டில் வைத்து இராமலிங்கரின் அண்ணன் சபாபதி தினமும் பெரியபுராணம் சொற்பொழிவு நடத்துவார். ஒரு நாள் சபாபதிக்கு உடல் நலம் இல்லை. இந்தச் செய்தியைச் செட்டியாரிடம் சென்று கூறி வருமாறு இராமலிங்கரை அவர் அண்ணன் அனுப்பி வைத்தார். செட்டியா இராமலிங்கத்திடம் ஒரு பாடலைக் கூறி அப்பாடலுக்கு விளக்கம் அளிக்குமாறு கேட்டார். இராமலிங்கர் அப்பாடலுக்கு விரிவான விளக்கம் அளித்தார். நாளை இராமலிங்கரே வந்து சொற்பொழிவு செய்ய வேண்டும் என வேண்டினார். இதை இராமலிங்கரின் அண்ணன் சபாபதி அறிந்தார். இராமலிங்கர் சொற்பொழிவு செய்யும் போது மறைந்து நின்று கேட்டார், தம் தம்பியின் அறிவை எண்ணி வியந்து மகிழ்ந்தார்.

6. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 500 சொற்களுக்கு மேல் விடையளிக்க. 6

(அ) வேலை வேண்டி விண்ணப்ப படிவம் ஒன்றை தயார் செய்க. (பாடம் 15)

(ஆ) பின்வரும் கதையினைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க. (பாடம் 26)

"ஒரு ஊரில் ஒரு காகம் இருந்தது. இந்தக் காகம் தன்னைப்பற்றி உயர்வான கற்பனை கொண்டதாக இருந்தது.
ஒரு நாள் அந்தக் காகம் ஒரு வடையைத் திருடிக் கொண்டு வந்து மரத்தில் அமர்ந்தது.
அப்போது அங்கு ஒரு நரி வந்தது. அது தந்திரக்கார நரி
நரி காகத்திடம் காக்காயே உன் குரல் இனிமையானது என்றும் நீ சிறந்த பாடகன் என்றும் கேள்விப்பட்டேன். ஒரு பாட்டு பாட மாட்டாயா? என்று கேட்டது.
நரியின் சூழ்ச்சியை அறிந்த காகம் வடையை எடுத்து காலில் வைத்துக் கொண்டு கா! கா! என்று பாட்டுப் பாடியது.
ஏமாந்த நரி ஓடிப்போயிற்று."

(அ) காகம் எதனைத் திருடியது?

(ஆ) நரி காகத்திடம் என்ன கேட்டது?

(இ) கதையின் முடிவில் ஏமாற்றமடைந்தது எது?

----------------